1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்கொலை என்றுதான் இருக்கிறது.

சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்பு சட்டம்

* 582 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (Madras City Tenants Protection Act) விதிகளைக் கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

Sivakasi Panchayat Union Council

* 583 *Q.*—THIRU N. DENNIS : THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Sivakasi Panchayat Union Council has been dissolved by the Government in March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டையின் காரணமாகவும், ஒன்றியக்குழு அதன்மேல் சட்டப் பூர்வமாக அளிக்கப்பட்ட கடமைகளைத் தொடர்ந்து செய்யத் தவறியதன் காரணத்திற்காகவும் அரசு இராமனுதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுவை 17—3—1973-ல் இருந்து மூன்று மாதத்திற்கு கலைக்க உத்திரவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள அரசின் உத்திரவினை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியக் குழு மூன்று மாதங்கள் மேற்கொண்டு செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அதன்பின்னர் அரசு இதுபற்றி மீண்டும் பரிசீலிக்கலாம் என்ற கருத்தினையும் சுப்ரீம் கோர்ட் வெளியிட்டிருக்கிறது. கோர்ட்டாரின் உத்திரவுக்கிணங்க ஒன்றியக் குழுவை செயல்பட அனுமதிக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இந்த சிவகாசி பஞ்சாயத்து யூனியன் விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. அரசாங்கம் வேண்டுமென்றே, ஒரு வாய்ப்பு தராமல், அந்தப் பஞ்சாயத்து யூனியனைக் கலைத்திருக்கிறது என்ற கருத்து அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி பஞ்சாயத்து யூனியன் வேண்டுமென்றே திட்டமிட்டு, ஒரு அமைச்சருடைய முயற்சியால் கலைக்கப்பட்டது என்பது உண்மையா? ......

திரு. நா. வீராசாமி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே, மேற்கொண்டு தகவல் கேட்பதற்குத்தான் கேள்வி கேட்கலாமேயொழிய குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. பெ. சீனிவாசன்: அந்த ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர் திரு. கோபாலசாமி என்பவர்மீதும், அவருடைய சகாக்கள்மீதும், நியாய உணர்வுள்ளவர்கள் மீதும் கிரிமினல் வழக்கு போடப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படிப்பட்ட வழக்குகள் சம்பந்தமான செயற்குறிப்புகள் எதுவும் என்னிடத்திலே இல்லை. 1972-ம் ஆண்டு ஜனவரி முதலிலிருந்தே அது சரிவர இயங்கவில்லையென்றும், அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவரப் பரிசீலனை செய்யவில்லை என்றும், 4—5—1972லும், 3—7—1972லும் நடைபெற்ற கூட்டங்களில் எந்த அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றத் தீர்மானிக்கவில்லையென்ற விஷயமும் அரசின் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டு அதற்குப் பிறகு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் என்னிடத்திலே இல்லை. அதிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற குறிப்பும் என்னிடத்திலே இல்லை. இப்பொழுது 3 மாத அவகாசம் தரப்பட்டிருக்கிறது. அந்த 3 மாதத்திற்குப் பிறகு மேலும் பரிசீலனை செய்யலாம்.

முற்பகல் 9-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சர்க்கார் உத்தரவுப்படி டி.ஆர்.டி. பஞ்சாயத்து யூனியன் இயங்க ஏற்பாடு செய்திருக்கிறதா? அப்படி பஞ்சாயத்து யூனியன் இயங்கிக்கொண்டிருக்கிறதா? இல்லையென்றால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறது?

1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுப்ரீம் கோர்ட் நாம் போட்ட உத்தரவுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. காரணம் நாம் ஓராண்டுக் காலம் அந்த ஒன்றியம் செயல்படவேண்டும் என்றே காலம் கொடுத்தோம். எப்படியாவது நடக்க வேண்டுமென்று பூரண ஒத்துழைப்புத் தந்தோம். அது செயல்பட முடியவில்லை. அதற்குப் பின்னால்தான் அலைதக் கலைக்க உத்தரவிடப்பட்டது. கலெக்டர் உத்தரவு, டி.ஆர்.டி. உத்தரவு, அரசாங்க உத்தரவு ஆகியவை ஒன்றுக்கொன்று டைம் கொடுத்ததா என்றுதான் ஆய்வு செய்தார்கள். மேலும் ஒரு 3 மாத காலம் டைம் கொடுக்கலாம் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. பெ. சினிவாசன் : சிவகாசி ஊராட்சி ஒன்றியம் நல்லமுறையில் செயல்படவேண்டுமென்றால் அங்குள்ள ஆணையரை மாற்ற வேண்டுமென்று பெருந்தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது வரை அந்த ஆணையர் மாற்றப்படவில்லை. அந்த ஊராட்சி ஒன்றியம் கூடி நல்லமுறையில் செயல்பட, இனிமேலாவது அந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனரை மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒரு ஒன்றிய ஆணையர் ஒரு ஒன்றியம் நல்லமுறையில் செயல்படுவதை எந்தவகையிலும் தடுக்க முடியாது. அவர் நிர்வாகத்தைத்தான் கவனித்துக்கொள்கிறார். நானே ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்தான். சிவகாசி ஒன்றிய ஆணையர் சரியான முறையில் செயல்பட்டு வருகிறார் என்பதை நானே பார்த்திருக்கிறேன். இப்போது மாற்றவேண்டியதில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சுப்ரீம் கோர்ட் முரண்பட்ட உத்தரவுகள் போடப்பட்டிருப்பது பற்றி கூறினார்கள் என்றார். அது சம்பந்தமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முரண்பட்ட உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்லவில்லை. நாமே ஓராண்டு காலத்திற்கு மேல் கொடுத்திருக்கிறோம். மேலும் 3 மாத காலம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மூன்று மாத காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 3 மாத காலம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார். அந்த யூனியன் செயல்பட முடியவில்லை என்றால் அரசாங்கத்தையோ அமைச்சரையோ சொல்லிப் பயன் இல்லை. அது நடக்க முடியவில்லை, அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?